## இயல் 3 கப்பலோட்டிய தமிழர்

வ.உ.சிதம்பரனாரின் உரையை வாழ்க்கை வரலாறாகச் சுருக்கி எழுதுக.

### முன்னுரை

தென்னாட்டில் உள்ள தூத்துக்குடி நகரின் பெருமையைத் தம் பெருமையாக்கிக் கொண்டவர் சிதம்பரனார். 'இந்தியக் கடலாட்சி எமதே' எனக் கருதி இறுமாந்திருந்த ஆங்கிலேயரைப் பொறி கலங்கி, நெறி மயங்கச் செய்தவர் கப்பலோட்டிய தமிழர் சிதம்பரனார்.

### சுதேசிக் கப்பல்

இந்நகரில் சுதேசக் கப்பல் கம்பெனி ஒன்று உருவானது. பாண்டித்துரையார் அக்கம்பெனியின் தலைவர் ஆனார். சிதம்பரனார் செயலாளர் ஆனார். கப்பல் வெள்ளோட்டம் பார்ப்பதற்காக தூத்துக்குடியில் இருந்து கொழும்புத் துறையை நோக்கிப் புறப்பட்ட நாளில், சிதம்பரனார் உள்ளத்தில் இன்பம் பொங்கியது; ஆனந்தக் கண்ணீர் வழிந்தது.

### ஆங்கிலேயரின் அடக்குமுறை :

அன்று முதல் சுதேசக்கப்பல் வாணிகம் வளர்ந்தது; வெள்ளையர் வாணிகம் தளர்ந்தது. அதனால் சுதேசிக் கம்பெனி வேலையினின்று சிதம்பரனார் விலகிக் கொண்டால் நூறாயிரம் ரூபாய் கையடக்கம் தருவதாக மறைமுகமாகக் கூறினர். சிதம்பரனாரின் நண்பர்களையும் பலவாறு பயமுறுத்தினர்.

### சிறைவாசம் :

பொதுக் கூட்டங்களிலும் சிதம்பரனார் பேசும்பொழுது, வந்தே மாதரத்தை அழுத்தமாகச் சொல்வது வழக்கம். அதைக் கேட்டு நாட்டு மக்கள் ஊக்கமுற்றவர்கள்; உணர்ச்சி பெற்றார்கள். அதனால் சிதம்பரனார் மீது குற்றம்சாட்டிக் கைது செய்தது ஆங்கிலேய அரசு. சிதம்பரனார்க்கு, இரட்டைத் தீவாந்தர தண்டனை வழங்கப்பட்டது. ஆறாண்டு கோவைச்

சிறையிலும், கண்ணூர்ச் சிறையிலும் கொடும்பணி செய்தார். சிறையில் செக்கிழுத்தார். ஆனால், சிறையில் இருக்கும்போது தமிழ் நூல்களைப் படித்துத் தன் துயரைப் போக்கினார்.

விடுதலை :

சிறை வாழ்வு முடிந்ததும், தூத்துக்குடியை வந்தடைந்தார். தேசக்கப்பலைத் துறைமுகத்தில் காணாது ஆறாத்துயருற்றார். 'பட்ட பாடெல்லாம் பயனற்றுப் போயிற்றே' என்று பரிதவித்தார். 'என்று வருமோ நற்காலம்" என்று ஏங்கினார்.

முடிவுரை :

இன்று இல்லாவிட்டாலும் என்றேனும் சுதந்திரம் வந்தே தீரும். வீரசுதந்திர வெள்ளம் புறப்பட்டுவிட்டது. அதைத் தடுத்து நிறுத்த யாரால் ஆகும் பாரதநாட்டிலே? என்று தம்மனதில் சொல்லிக் கொண்டு கடற்கரையை விட்டு அகன்றார்.